# FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8066079

1. District : Coimbatore மாவட்டம் PS: Vigilance and Anticorruption காவல்நிலையம் Year: 2019 ஆண்டு FIR No.: 14/2019/AC/CBE Date: 16.07.2019 1300 hrs முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்: Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Criminal Procedure code Sections பிரிவுகள்: 41 r/w 102 Cr PC
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் monday Date from : 15.07.2019 நாள் முதல் Date to : – நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : 1730 hrs நேரம் முதல் Time to : 2330 hrs நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.07.2019 Time : 1300 hrs நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD vol. II 16.07.2019 Time : 1300 hrs நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: North east about 8 km
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : o/o Gandhipuram Sub Registrar Kalapatty road Saravanampatty, Coimbatore முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : – District : –
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. Duraisamy குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : Pethappan தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth 48 yrs நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : Indian நாட்டினம் (e) Passport No. : – வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Inspector cell office (g) Address : Collectorate campus Coimbatore. முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) Tmt. R. Amsaveni age 43, Assistant S/o SRO Gandhipuram
   2) Tmt. P. Logeshwari age 50 w/o Raman, Assistant o/o Gandhipuram Sub Registrar
   3) Tmt. R. Vengatamani age 55 w/o Kaliyadasan, Jr Assistant. o/o Gandhipuram Sub Registrar
   4) Tmt. A. Samundeswari age 50 w/o Manusamy, Assistant. o/o Gandhipuram Sub Registrar
   5) Tr. P. Thiagarajan age 58 S/o Palaniappa Gowder, office Assistant, o/o Gandhipuram Sub Registrar, Saravanampatty, Coimbatore

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-27.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரனை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

16/7/2019 | 16/07/2019
--- | ---
14. Signature / Thumb Impression of the Complainant / Informant<br>குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /<br>பெருவிரல் இரேகைப் பதிவு | Signature of the Officer in-charge, Police Station<br>காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
15. Date & Time of despatch to the court: 16.07.2019<br>நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்<br>1400 hrs | Name: பெயர் .......G. ARUMUGAM Inspector of police.......<br>Rank: நிலை ............ V.S. No. எண் .......... Coimbatore

<u>சமர்பிக்கப்படுகிறது:</u>

**<u>Contents of FIR in Coimbatore V&AC, Cr.No.14/2019/AC/CB u/s 7(a) of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 41 Cr.PC r/w 102 Cr.PC.</u>**

15.07.2019 ஆம் தேதி 17.30 மணி முதல் 23.30 மணி வரை கோவை காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் நடைபெற்ற திடீர் தணிக்கை நடவடிக்கையை தொடர்ந்து, 16.07.2019 ஆம் தேதி காலை 13.00 மணியளவில் கோவை மாவட்ட ஆய்வுகுழு அலுவலர், திரு.P.துரைசாமி அவர்கள் மேற்படி திடீர் தணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்ட முறைகேடுகள் மீது நடவடிக்கை எடுக்க கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்திற்கு வழக்கு பதிவு செய்ய அனுமதி பெற்று அதன் படி இன்று 16.07.2019 ஆம் தேதி மதியம் 13.30 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.14/2019/AC/CB u/s 7(a) of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 41 Cr.PC r/w 102 Cr.PC ன்படி 1) திருமதி.R.அம்சவேணி, வயது–43, க/பெ சின்னதம்பி, உதவியாளர், சார்பதிவாளர் (பொறுப்பு), காந்திபுரம் சார்பதிவளர் அலுவலகம், சரவணம்பட்டி, கோவை, 2) திருமதி.P.லோகாத்தாள், வயது–50, க/பெ பாஸ்கர், உதவியாளர், காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகம், சரவணம்பட்டி கோவை, 3) திருமதி.R.வெங்கடேஷ்வரி, வயது–38, க/பெ கபீர்தாசன், இளநிலை உதவியாளர், காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகம், சரவணம்பட்டி, கோவை, 4) திரு.P.தியாகராஜன், வயது–58, த/பெ பழனியப்பதேவர், அலுவலக உதவியாளர், காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகம், சரவணம்பட்டி, கோவை, 5) திருமதி.A.சாமுண்டீஸ்வரி, வயது–50, க/பெ முனுசாமி, உதவியாளர், காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகம், சரவணம்பட்டி, கோவை ஆகியோர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. புகாரின் விபரம் பின்வருமாறு, அனுப்புனர்– திரு.P.துரைசாமி, மாவட்ட ஆய்வுகுழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயம்புத்தூர். பெறுநர்– காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். ந.க.எண்.145/2018/ஐ1 நாள் 16.07.2019, அய்யா, பொருள்– திடீர் ஆய்வு – கோவை மாநகர் – கோவை காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகம் – நடவடிக்கை எடுத்தல் வேண்டி – புகார் மனு. கோவை காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்வதற்கும், வில்லங்க சான்று பெறுவதற்கும் வருகை தரும் பொது மக்களிடமிருந்தும், பத்திர

எழுத்தர்களிடமிருந்தும் இடைத்தரகர் மூலமாகவும், நேரடியாகவும் கையூட்டு பணம் பெற்று வருவதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரில் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும் கோவை மாவட்ட ஆய்வுகுழு அலுவலராகிய நானும், கோவை ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புப் பிரிவு ஆய்வளார் திரு.G.ஆறுமுகம் மற்றும் காவல் குழுவினருடன் இணைந்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 15.07.2019 ஆம் தேதி மாலை 17.00 மணிக்கு புறப்பட்டு சென்று கோவை காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் கூட்டு ஆய்வு மாலை 17.30 மணி முதல் இரவு 23.30 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. கோவை காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகம், சரவணம்பட்டியில், சரவணம்பட்டி to காளப்பட்டி ரோட்டில் தெற்குபுறமாக உள்ள குமரன் நகர் செல்லும் கிளை ரோட்டில் கிழக்கு பார்த்த நுழைவாயிலுடன் அமைந்துள்ளது. இவ்வலுவலகம் அரசுக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இந்த கட்டிடத்தின் கிழக்கு பார்த்த வாயிலுக்குள் நுழைந்ததும் வராண்டா ஒன்று பொது மக்கள் அமருவதற்காக இருக்கைகளுடன் உள்ளது. வராண்டாவை ஒட்டி கண்ணாடி கதவுகள் போடப்பட்டுள்ள வடக்கு பார்த்தவாறு உள்ள வாயிலினுள் நுழைந்ததும் ஒரு பெரிய ஹால் உள்ளது. அந்த ஹாலின் கிழக்கு பார்த்தவாறு சார்பதிவாளரின் இருக்கை இருந்தது. அதில் அமர்ந்திருந்த திருமதி.அம்சவேணி என்பவரிடம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.P.துரைசாமி அவர்களும் உடனிருந்த ஊ.த.க காவல் ஆய்வாளர் திரு.கோ.ஆறுமுகம் மற்றும் குழுவினர்களுடன் தங்களை அறிமுகம் செய்து கொண்டு திடீர் தணிக்கைக்கு வந்த விபரத்தை கூறியும் தங்களிடம் பணமோ பொருளோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டனர். திருமதி.அம்சவேணியிடம் விசாரிக்க அவர் இந்த அலுவலகத்தின் சீனியர் உதவியாளர் என்றும் தான் 03.08.2018 ம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாகவும் இந்த சார்பதிவாளர் அலுவலகமானது மாவட்ட பதிவாளர் நிலையில் உள்ளது என்றும் மேற்படி மாவட்ட பதிவாளர் பணியிடம் காலியாக உள்ளதால் தான் கடந்த 08.07.2019 முதல் சார்பதிவாளர் பொறுப்பினை கூடுதலாக வகித்து வருவதாகவும் சொன்னார். அவருக்கு அருகே TCS நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட தற்காலிக பணியாளர் திருமதி.கன்னியம்மாள் என்பவர் அமர்ந்திருந்தார். அந்த அலுவலகத்தில் பார்வையாளர்கள் அமரும் அறையில் பதிவுக்காக வந்த சில நபர்கள் அமர்ந்திருந்தனர். மேலும் அலுவலகத்தில் உதவியாளர்கள் திருமதி.லோகாத்தாள், திருமதி.வெங்கடேஷ்வரி, திருமதி.சாமுண்டீஸ்வரி, இளநிலை உதவியாளர் திரு.சதீஷ்குமார், அலுவலக உதவியாளர் திரு.தியாகராஜன் மற்றும் TCS நிறுவனத்தின் தற்காலிக பணியாளர்கள் ராதாமணி, வளர்மதி, மகாலஷ்மி, ஜெயஸ்ரீ,

கார்த்திகேயன், சந்தோஷ் ஆகியோர்கள் இருந்தார்கள். அலுவலகத்திலிருந்த தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டை பெற்று பார்வையிடப்பட்டது. அதில் பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.அம்சவேணி ரூ.650/- கொண்டு வந்துள்ளதாக பதிவு செய்துள்ளதும், உதவியாளர் திருமதி.லோகாத்தாள் ரூ.650/- கொண்டு வந்துள்ளதாக பதிவு செய்துள்ளதும், உதவியாளர் திருமதி.வெங்கடேஷ்வரி ரூ.500/- கொண்டு வந்துள்ளதாக பதிவு செய்துள்ளதும், இளநிலை உதவியாளர் திரு.சதீஷ்குமார் ரூ.1200/- கொண்டு வந்துள்ளதாக பதிவு செய்துள்ளதும், இளநிலை உதவியாளர் திரு.முத்து பிராபகரன் ரூ.1100/- கொண்டு வந்துள்ளதாக பதிவு செய்துள்ளதும் தெரிய வந்தது. மேற்படி பதிவேடு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திருமதி.அம்சவேணி மேற்படி பதிவேட்டில் இந்த அலுவலகத்தில் பணிபுரியும் தனி நபர்கள் கொண்டு வந்த பணத்தை மேற்படி பதிவேட்டில் பதிவு செய்யவில்லை என்று தெரிவித்தார். திருமதி.அம்சவேணி அவர்களிடம் உள்ள பணம் பற்றி கேட்க அவர் தான் இன்று பணம் ரூ.650/- கொண்டு வந்ததாகவும் அதனை கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும் சொன்னார். மேற்படி பணத்தில் ரூ.105/- உணவுக்காக செலவு செய்துள்ளது போக, மீதி பணம் ரூ.545/- உள்ளதாக சொல்லி ஆஜர் செய்தார். தனிநபர் பதிவேட்டில் பதிவு செய்துள்ளபடி மேற்படி விளக்கம் சரியாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.545/- ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் அருகில் திருமதி.கன்னியம்மாள் கணினியில் இரசீது போட்டு கொண்டிருந்தார். அவரை விசாரிக்க தான் தற்காலிக பணியாளராக கடந்த 06.11.2017 முதல் இந்த அலுவலகத்தில் டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் பணி செய்து வருவதாகவும் சொன்னார். அவரிடம் உள்ள பணம் பற்றி கேட்க அவரது கைப்பையில் இருந்து ரூ.140/- இருந்ததை எடுத்து ஆஜர் செய்து அந்த பணம் தனது சொந்த பணம் என்றும் கைசெலவுக்காக வைத்துள்ளதாக சொன்னதால் அந்த பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் தற்காலிக பணி என்பதால் கையிருப்பு பதிவேட்டில் பணம் பற்றி பதிவு செய்வது இல்லை என்று சொன்னார். சார்பதிவாளரின் இருக்கைக்கு முன்பாக வடக்கு பார்த்தவாறு இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த உதவியாளர் திருமதி.சாமுண்டீஷ்வரி என்பவரை பற்றி விசாரிக்க அவர் இந்த அலுவலகத்தில் 03.08.2017 ம் தேதி முதல் உதவியாளராக பணி செய்து வருவதாகவும் திருமண பதிவு சம்மந்தமான பணிகளை செய்து வருவதாகவும் சொன்னார். அவரிடம் உள்ள பணம் பற்றி கேட்க தனது கைப்பையிலிருந்து பல இடங்களிலிருந்து தனிதனியாக மடித்து வைக்கப்பட்டிருந்த பணம் ரூ.3200/- எடுத்து ஆஜர் செய்துார். அது பற்றி விசாரிக்க இன்று காலை ரூ.300/- மட்டும் கொண்டு வந்ததாகவும் அதனை கையிருப்பு பதிவேட்டில் பதியவில்லை என்றும்

சொன்னார். மேற்படி பணம் ரூ.3,200/– ஐ (500X5, 100X5, 50X4) பற்றி கேட்க அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணத்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது இருக்கைக்கு அருகில் இருந்த உதவியாளர் திருமதி.வெங்கடேஷ்வரி என்பவரை பற்றி விசாரிக்க அவர் இந்த அலுவலகத்தில் 31.08.2016 ம் தேதி முதல் உதவியாளராக பணி செய்து வருவதாகவும் தான் பத்திரம் பதிவு செய்வதற்கு முன்னர் பதிவு செய்வதற்கான பத்திரத்தை (Temporary Deed) சரியாக உள்ளதா என்று ஆய்வு செய்யும் பணியினை செய்து வருவதாகவும் சொன்னார். அவரிடம் உள்ள பணத்தை பற்றி கேட்க அவர் அவரது கைப்பையிலிருந்து ரூ.1,170/– எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி கேட்க இன்று காலை ரூ.500/– கொண்டு வந்ததாகவும் அதனை கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும் சொன்னார். மேற்படி மீதி பணம் ரூ.670/– ஐ (500x1, 100x1, 50x1, 20x1) பற்றி கேட்க அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணத்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனருகில் இருந்த சீனியர் உதவியாளர் திருமதி.ரா.அம்சவேணி என்பவரின் உதவியாளரின் இருக்கையை சோதனை செய்ய அந்த மர மேஜையின் இடதுபுற டிராயரில் ரூ.160/– இருந்தது. அது பற்றி திருமதி.அம்சவேணியிடம் மேற்படி பணம் ரூ.160/– ஐ (100x1, 10x6) பற்றி கேட்க அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணத்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து சார்பதிவாளர் (பொறுப்பு) அவர்களிடம் அலுவலக வரவு செலவு கணக்குகளை பற்றி விசாரிக்க பதிவேடு அறைக்குள் உள்ள பணப்பெட்டகத்தில் நிரந்தர வைப்பு தொகை உள்ளதாக சொல்லி அழைத்து சென்று பணபெட்டகத்தில் உள்ள நிரந்தர வைப்பு தொகை வைக்கப்பட்டிருந்த ஒரு கருப்பு நிற சுருக்கு பையை எடுத்து ஆஜர் செய்தார். அதைப்பற்றி விசாரிக்க அது ஆவண எண்.3176/2018 க்கு 13.06.2018 ம் தேதி குறைவு முத்திரை தீர்வைக்கு வேண்டி வசூலிக்கப்பட்ட கட்டணம் ரூ.79,000/– என்றும் அதை சி– அக்கௌன்ட் புத்தகத்தில் 22.11.2018 வரை இருசால் செய்யாமல் இருப்பில் உள்ளதாகவும் அதன் பின் ஆன்லைன் ஆக்கப்பட்டதால் அதன்பின் சி/அக்கௌன்ட் புத்தகம் பராமரிக்கப்பட வில்லை என்றும் தெரிவித்தார். அந்த கருப்பு சுருக்கு பைக்குள் இருந்த பணத்தை எடுத்து எண்ணி பார்க்க அதில் பணம் ரூ.67,000/– இருந்தது. திருமதி அம்சவேணியிடம் அவர்கள் சொன்ன ரூ.79,000/– க்கு பதில் ரூ.67,000/– மட்டுமே உள்ளது என்று சொல்லி அதற்கு விளக்கம் கேட்டபோது சார்பதிவாளர் (மாவட்ட பதிவாளர் நிலை) ஆக இருந்த திருமதி.சி.விஜயசாந்தி அவர்கள் என்னிடம் அலுவலக பொறுப்பு மற்றும் கணக்குகள் எதையும் என்னிடம் ஒப்படைக்காமல் மருத்துவ விடுப்பில் 08.07.2019 முதல் சென்று

விட்டார் என்றும் மேற்படி பணம் பற்றிய விபரம் தனக்கு தெரியாது என்றும் கூறினார். ரூ.79,000/—க்கு பதில் ரூ.67,000/— இருந்ததால் திருமதி.அம்சவேணியிடம் மீண்டும் அந்த தொகையை பற்றி கேட்கப்பட்டது. அப்போது குறைவு தொகையை பற்றி தனக்கு தெரியாது என்றும் தெரிவித்தார். கடந்த ஒரு வருட காலமாக மேற்படி பணம் இருசால் செய்யாமல் நிலுவையில் இருந்து வருவதற்கு எந்த காரணமும் அம்சவேணியால் தெரிவிக்க முடியாததால் அது மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளதால் அவரை விசாரிக்க அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாமல் முன்னுக்கு பின் முரணாக சொன்னார். எனவே மேற்படி பணம் ரூ.67,000/—ஐ (2000x28, 500x19, 200x2, 100x11) கணக்கில் வராத பணம் என்று கருத்தில் கொண்டு மேற்படி பணம் ரூ.67000/— ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி கருப்பு சுருக்கு பைக்குள் இருந்த இன்னொரு காக்கி நிற சுருக்கு பைக்குள் இருந்த பணம் ரூ.260/— பற்றி விசாரிக்க அது நிரந்தர வைப்பு நிதியாக ரூ.100/— மட்டுமே H கணக்கில் காட்டப்பட்டுள்ளது. அதிகமாக உள்ள பணம் ரூ.160/— பற்றி விசாரிக்க அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.160/— ஐ (100x1, 50x1, 10x1) விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி காக்கி நிறம் மற்றும் கருப்பு நிறம் கொண்ட இரு சுருக்கு பைகளையும், நிரந்தர வைப்பு தொகை ரூ.100/—ஐ திருமதி.அம்சவேணியிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் பண பெட்டகத்தில் இருந்த பணம் ரூ.32,000/— பற்றி விசாரிக்க அது கொடிநாள் வசூல் செய்யப்பட்ட பணம் என்றும் இதனுடைய மீதி பணம் ஹாலில் உள்ள பீரோவில் இருப்பதாக சொல்லி ரூ.38,000/—ஐ பீரோவிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். அது பற்றி விசாரிக்க அது சம்மந்தமான இரசீதுகளை எடுத்து ஆஜர் செய்தார். அதை ஒப்பிட்டுப் பார்த்ததில் மேற்படி பணம் சரியாக இருந்தது. எனவே மேற்படி பணம் ரூ.70,000/— ஐ திருமதி.அம்சவேணியிடமே ஒப்படைக்கப்பட்டது. அந்த ஹாலை ஒட்டி வடக்கு பார்த்தவாறு பதிவறை உள்ளது. அந்த பதிவறையில் செல்வி.ராதாமணி, செல்வி.வளர்மதி, செல்வி. மகாலஷ்மி, செல்வி.ஜெயஸ்ரீ மற்றும் செல்வன்.கார்த்திகேயன் ஆகிய ஐந்து தற்காலிக ஊழியர்கள் பழைய ஆவணங்களை ஸ்கேன் செய்து கணினியில் பதிவேற்றம் செய்து கொண்டிருந்தார்கள். மேற்படி ஐந்து அலுவலர்களிடம் பணம் பற்றி விசாரித்து பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. அந்த அறைக்கு அருகில் மேற்கு பார்த்தவாறு கண்ணாடியால் தடுக்கப்பட்ட கணிணி அறை உள்ளது. அந்த அறையினுள் திரு.சதீஷ்குமார், இளநிலை உதவியாளர் ஆவணங்களை ஸ்கேன் செய்து கொண்டிருந்தார். அவரை பற்றி விரசிக்க தான் 28.04.2017 ம் தேதி முதல் இவ்வலுவலகத்தில் பணி செய்து வருவதாகவும் அவரிடம் உள்ள பணத்தை பற்றி

கேட்க அவர் அவரது மணிபர்சிலிருந்து ரூ.1000/– எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி கேட்க இன்று காலை ரூ.1200/– கொண்டு வந்ததாகவும் அதனை கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும் அதில் உணவுக்காக செலவு செய்தது போக மீதமுள்ள பணம் ரூ.1000/– என்றும் அது தனது சொந்த பணம் என்று சொன்னதால் அந்த பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதே அறையில் திரு.சந்தோஷ், கணினியில் வேலை பார்த்துக் கொண்டிந்தார். அவரை பற்றி விசாரிக்க தான் 03.06.2017 ம் தேதி முதல் இவ்வலுவலகத்தில் தற்காலிக கேமரா ஆபரேட்டராக பணி செய்து வருவதாகவும் அவரிடம் உள்ள பணத்தை பற்றி கேட்க அவர் அவரது மணிபர்சிலிருந்து ரூ.520/– எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி கேட்க இன்று காலை ரூ.600/– கொண்டு வந்ததாகவும் தான் தற்காலிக பணியாளர் என்பதால் அதனை கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்யவில்லை என்றும் அதில் உணவுக்காக செலவு செய்தது போக மீதமுள்ள பணம் ரூ.520/– உள்ளது என்றும் அது தனது சொந்த பணம் என்று சொன்னதால் அந்த பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதே அறையில் திருமதி.லோகாத்தாள், உதவியாளர் கணினியில் வேலை பார்த்து கொண்டிருந்தார். அவரை பற்றி விசாரிக்க தான் ஜாயின்ட்–1 சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணி புரிந்து வருவதாகவும் தற்போது அயல் பணியாக கடந்த அக்டோபர் 2018 முதல் இவ்வலுவலகத்தில் வில்லங்க சான்று சம்மந்தமான பணி செய்து வருவதாகவும் சொன்னார். அவரிடம் உள்ள பணத்தை பற்றி கேட்க அவர் அவரது கைப்பையிலிருந்து ரூ.3070/– எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி கேட்க இன்று காலை ரூ.600/– கொண்டு வந்ததாகவும் அதனை கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும் சொன்னார். மேற்படி பணம் போக மீதமுள்ள பணம் ரூ.2470/– வை பற்றி விசாரிக்க மேற்படி பணத்தை பற்றி சரியான முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.2470/– (500x2, 200x2, 100x10, 50x1, 20x1) ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த ஹாலின் வடக்கு பார்த்து போடப்பட்டிருந்து ஆவணங்களுக்கு சீல் வைக்கும் இருக்கையில் அமர்ந்திருந்தவரை பற்றி விசாரிக்க தனது பெயர் தியாகராஜன் என்றும் தான் இந்த அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக 03.08.2017 ம் தேதியிலிருந்து பணி செய்து வருவதாகவும் இன்று காலை பணம் ஏதும் கொண்டுவரவில்லை என்றும் எனவே கையிருப்பு பதிவேட்டில் ஏதும் பதிவு செய்யவில்லை என்றும் சொன்னார். அவரை மேலும் விசாரிக்க தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.500/– எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் ரூ.500/– பற்றி விசாரிக்க சரியான முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.500/–ஐ (100x5) விசாரணைக்காக

கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது இருக்கைக்கு அருகில் வடக்கு புறமாக இருந்த சார்பதிவாளரின் ஓய்வு அறையை சோதனை செய்ய அந்த அறையின் வடகிழக்கு மூலையில் பதிவேடுகளுக்கு இடையில் கத்தையாக பணம் சொருகி வைக்கப்பட்டிருந்ததை எடுத்து அதனை எண்ணி பார்க்க அதில் ரூ.5600/– இருந்தது. மேற்படி பணத்தை பற்றி சார்பதிவாளர் பொறுப்பில் இருந்த திருமதி.அம்சவேணியிடம் விசாரிக்க அவர் அந்த பணம் பற்றி சரியான முகாந்திரம் சொல்லாததால் அந்த பணம் ரூ.5600/– ஐ (500x8, 200x1, 100x14) விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அப்போது மாலை சுமார் 18.00 மணிக்கு கருவூலத்திற்கு சென்று சார்பதிவாளர் அலுவகத்திற்குள் வந்த திரு.M.முத்துபிரபாகரனை பற்றி விசாரிக்க தான் 01.04.2019 ம் தேதி முதல் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி செய்து வருவதாக சொன்னவரிடம் அவரிடம் உள்ள பணத்தை பற்றி கேட்க அவர் அவரது மணிபர்சிலிருந்து ரூ.760/– எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி கேட்க இன்று காலை ரூ.1100/– கொண்டு வந்ததாகவும் அதனை கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும் அதில் உணவுக்காக செலவு செய்தது போக மீதமுள்ள பணம் ரூ.760/– உள்ளது என்றும் அது தனது சொந்த பணம் என்று சொன்னதால் அந்த பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் சார்பதிவாளர் (பொறுப்பு) திருமதி.ரா.அம்சவேணியை விசாரிக்க இன்று 15.07.2019 ம் தேதி பதிவேடுகளில் பதிவான தொகை பற்றி கீழ் கண்டவாறு விவரத்தை தெரிவித்தார்.

| Head of Account | E.Payment | DD | Swipe Machine (POS) | Total |
|---|---|---|---|---|
| A-Account (Stamp) | Rs.42,79,823 | - | - | Rs.42,79,823 |
| Registration Fees | Rs.44,19,765 | - | Rs.345 | Rs.44,20,110 |
| Sub Division | Rs.3,760 | - | Rs.120 | Rs.3,880 |
| Internet Protocol CD | Rs.3,550 | - | - | Rs.3,550 |
| Sec 41 | - | - | - | - |
| Hindu Marriage | - | - | Rs.690 | Rs.690 |
| Chit | - | - | Rs.50 | Rs.50 |
| Permanent Account | - | - | Rs.100 | Rs.100 |
| B-Account (Protest Petition) | - | - | Rs.40 | Rs.40 |
| Certified Copy (CC) | - | - | Rs.120 | Rs.120 |
| CC EC | - | - | Rs.826 | Rs.826 |
| **Grand Total** | | | | **Rs.87,09,189/-** |

பதிவு ஆவணங்களில் விவரம்–ஆவண எண்.புத்தகம் 1 ல் 6789/2019 முதல் 6857/2019 வரை மொத்தம் 70 ஆவணங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. திடீர்

தணிக்கையின் நடவடிக்கையின் போது 1) அசல் அலுவலக வருகை பதிவேடு 01.01.2019 முதல் 15.07.2019 வரை உள்ளானது (1 முதல் 28 பக்கத்தில் முதல் 15 பக்கங்கள் எழுதப்பட்டிருந்தது). 2) H- அக்கௌண்ட் பதிவேடு 31.10.2017 முதல் 15.07.2019 வரை உள்ளது (1 முதல் 192 பக்கத்தில் முதல் 174 பக்கங்கள் எழுதப்பட்டிருந்தது). 3) C- அக்கௌண்ட் பதிவேடு 19.09.2017 முதல் 23.11.2018 வரை உள்ளது (1 முதல் 194 பக்கத்தில் முதல் 149 பக்கங்கள் எழுதப்பட்டிருந்தது). 4) A- அக்கௌண்ட் பதிவேட்டின் 15.07.2019 க்கான நகல் (1 முதல் 22 பக்கங்கள்). 5) பணம் கையிருப்பு பதிவேடு (28.05.2019 முதல் 15.07.2019 வரை ) (1 முதல் 106 பக்கத்தில் முதல் 37 பக்கங்கள் எழுதப்பட்டிருந்தது). 6) TCS நிறுவனத்திலிருந்து 15.07.2019 ம் தேதிக்கான டோக்கனுக்கான விபரம் (1 முதல் 6 பக்கங்கள்) 7) காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 15.07.2019 ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் விபரம். மேற்படி ஆவணங்களின் முதல் மற்றும் கடைசி பக்கத்தில் சார்பதிவாளர் (பொறுப்பு) திருமதி.அம்சவேணியிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் 15.07.2019 ம் தேதி ஆவணப்பதிவுக்காக வேண்டி டோக்கன் வழங்கப்பட்ட 95 நபர்களின் விபரங்கள் கிடைக்க துணை பதிவுத்துறை தலைவர் கோவை அவர்களை தொலைபேசி மூலம் கேட்டுக் கொண்டதின் பேரில் அவர் TCS நிறுவனத்தினரிடம் மேற்படி விபரங்கள் அளிக்க வேண்டுகோள் கொடுத்ததன் பேரில் மேற்படி விபரங்களை சென்னை TCS நிறுவனத்தினர் E-Mail மூலம் காந்திபுரம் சார்பதிவாளரின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைத்தனர். அந்த விபரங்களை பிரிண்ட் எடுத்து சார்பதிவாளர் (பொறுப்பு) திருமதி.அம்சவேணி அவர்கள் சான்றொப்பம் செய்து வழங்கினார். மேற்படி ஆவணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. ஆக மொத்தம் ரூ.79,760/– ஐ (ரூபாய் எழுபத்தி ஒன்பதாயிரத்து எழுநூற்று அறுபது) என் முன்னிலையில் ஆய்வாளர் திரு.G.ஆறுமுகம் அவர்களால் கைப்பற்றப்பட்டு என்னிடம் நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டது. மேற்படி நடவடிக்கையானது ஊதக அலுவலகத்திலிருந்து எடுத்து வந்த மடிகணினியில் தட்டச்சு செய்து பிரிண்ட் எடுக்கப்பட்டது. இன்று 15.07.2019 ம் தேதி இரவு 11.30 மணிக்கு நடவடிக்கை முடிக்கப்பட்டது. மேற்படி தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகளை இத்துடன் இணைத்துள்ளேன். அதில் இந்த திடீர் ஆய்வு சம்மந்தமான அனைத்து விவரங்களையும் குறிப்பிட்டுள்ளேன். திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.79,760/– மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களையும் தங்களிடம் ஒப்டைக்கிறேன். மேலும் இது சம்மந்தமாக 1) திருமதி.R.அம்சவேணி, வயது–43, க/பெ சின்னதம்பி, உதவியாளர், சார்பதிவாளர் (பொறுப்பு), காந்திபுரம்

சார்பதிவளர் அலுவலகம், சரவணம்பட்டி, கோவை, 2) திருமதி.P.லோகாத்தாள், வயது–50, க/பெ பாஸ்கர், உதவியாளர், காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகம், சரவணம்பட்டி கோவை, 3) திருமதி.R.வெங்கடேஷ்வரி, வயது–38, க/பெ கபீர்தாசன், இளநிலை உதவியாளர், காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகம், சரவணம்பட்டி, கோவை, 4) திரு.P.தியாகராஜன், வயது–58, த/பெ பழனியப்பதேவர், அலுவலக உதவியாளர், காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகம், சரவணம்பட்டி, கோவை, 5) திருமதி.A.சாமுண்டீஸ்வரி, வயது–50, க/பெ முனுசாமி, உதவியாளர், காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகம், சரவணம்பட்டி, கோவை ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள, Sdxxxxx 16/7/2019 (P.துரைசாமி). இணைப்பு– 1) நடவடிக்கை குறிப்புகள், 2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.79,760/–, 3) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள். Sir, Received a complaint on 16.07.2019 at 13.00 hrs. Sdxxxxx 16/7/2019 (G.Arumugam), V&AC, Coimbatore. Sir, After obtaining permission from DVAC, Chennai, I registered a case in Coimbatore V&AC, Cr.No.14/2019/AC/CB u/s 7(a) of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 41 Cr.PC r/w 102 Cr.PC on 16.07.2019 at 13.30 hrs. Sdxxxxx 16/7/2019 (G.Arumugam), Inspector of Police, Vigilance and Anti Corruption, Coimbatore. மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார் மனு, நடவடிக்கை குறிப்புகள் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்கள் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டன.

16/7/2019

**காவல் ஆய்வாளர்,**
**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,**
**கோயம்புத்தூர்.**